நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.414/2025

## P.W.1 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சூர்யா |
| தந்தை / கணவர் பெயர் | : | குபேந்திரன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 24 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம், மார்ச் மாதம், 10-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 01.31 PM

1. நான் தற்போது மாரிவளவில் குடியிருக்கிறேன். நான் தனியார் வங்கியில் வேலை செய்து வருகிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு நானும் பிரகாஷ், பாலாஜி, கார்த்தி ஆகியோர் டீக்குடிப்பதற்காக நங்கவள்ளிக்கு சென்றோம். திரும்ப வருவதற்காக காரில் நாங்கள் அனைவரும் வந்தோம். காரை பிரகாஷ்

ஓட்டிவந்தார்.

2. நாங்கள் பின்னால் அமர்ந்துக்கொண்டு தூங்கிக்கொண்டு வந்தோம். திடீரென சத்தம்கேட்டு முளித்துபார்த்தபோது கார் அடிப்பட்டிருந்தது. விபத்து யார் காரணம் என்று எனக்கு தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அடிப்பட்டவுடன் நான் மயக்கமாகி விட்டேன். என்னை மருத்துமவனைக்கு அழைத்து சென்றார்கள்.

3. மருத்துவமனை இருந்தபோது போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ( **புகார் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. 14.03.2025 ம் தேதி 23.15 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக என் நண்பர்கள் பிரகாஷ், பாலாஜி என் தம்பி கார்த்தி ஆகியோர்களுடன் KA 03 MD 3837 பதிவெண் கொண்ட காரை பிரகாஷ் ஓட்டிக்கொண்டு டிரைவர் சீட் அருகே கார்த்திக் மற்றும் பின் சீட்டில் நானும், பாலாஜியும் உட்கார்ந்துக்கொண்டு வந்தோம் என்றால் சரிதான்.
2. நங்கவள்ளியில் இருந்து தாரமங்கலம் ரோட்டில் மாமரத்து ரோடு அருகே வாகனம் சென்றுக்கொண்டிருந்தபோது காரை ஓட்டிய ஆஜர் எதிரி கட்டுப்படுத்த முடியாமல் ரோட்டின் இடதுப்பக்க ஓரத்தில் மரத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் பின்னால் அமர்ந்துக்கொண்டு தூங்கிக்கொண்டு வந்தேன்.
3. இந்த விபத்தில் அனைவருக்கும் பலத்த அடிப்பட்டது என்றும் பாலாஜிக்கு பலத்த அடிப்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் தனியார் மருத்துமவனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக

தகவல் சொன்னார் என்றால் சரிதான்.

4. இந்த விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. நான் கொடுத்த புகாரில் விபத்துக்கான காரணத்தை தெளிவாக சொல்லியுள்ளேன் என்றால் அதில் போலீசார் என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கிகொண்டார்கள். எதிரி என்னுடைய நண்பர் என்றால் சரிதான். அவருக்காக பரிந்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 01.40 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**